எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.நா.சுப்பிரமணியன்

ந.க.எண்.52/2024/அ2 **நாள்.15.03.2024**

பொருள் : மனைப்பிரிவு ஒப்புதல் – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் சர்வே எண்.606/29B ல் 9600 ச.மீ (2.37 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைகளுக்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1) தூத்துக்குடி மாவட்ட நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 24U83T0S/ THOOTHUKUDI/ 2023 /TCP நாள்.05.12.2023

2) எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற முன் அனுமதி நாள்.15.03.2024

3) தொடர்புடைய ஆவணங்கள்.

* * * * * * * * *

பார்வை (1) ல் காணும் தூத்துக்குடி மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி , எட்டையபுரம் பேரூராட்சி எட்டையபுரம் கிராமம் சர்வே எண். 606/29B ல் 9600 ச.மீ (2.37 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **SWP / DTCP / THOOTHUKUDI / LAYOUT No. 119/2023** ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 43 வரை உள்ள மனைகளுக்கான சாலைகள் மற்றும் உள்ளாட்சியின் பயன்பாட்டிற்கென எட்டையபுரம் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.3940/2023 நாள்.28.11.2023 ன்படி எட்டையபுரம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள 43 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் மற்றும் நாளது தேதியில் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டு தொகையில் 3 சதவீதம் கட்டணம் உட்பட தொகை ரூ.81,700/– (ரூபாய் எண்பத்தொறாயிரத்து எழுநூறு மட்டும்) அடையார் கிளை இந்தியன் வங்கியில் ECS மூலம் நாள்.15.03.2024 ன்படி எட்டையபுரம் பேரூராட்சி வங்கி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை (2) ல் காணும் விபரப்படி எட்டையபுரம் பேரூராட்சி மன்ற முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 606/29B ல் 9600 ச.மீ (2.37 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள 1 முதல் 43 வரையிலான 43 குடியிருப்பு மனைகளை பத்திரப்பதிவு செய்து கொள்ள தடையின்மை சான்று வழங்கப்படுவதுடன் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 43 குடியிருப்பு மனைகளுக்கு இதன் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) தாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. இதில் ஏதேனும் தவறுகள் / முறைகேடுகள் என பின்னர் தெரியவந்தால் இவ்வுத்தரவு முன்தேதியிட்டு இரத்து செய்யப்படும்.
2) இந்த மனைப்பிரிவில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் உரிய கட்டிட உரிமம்/அனுமதி உரிய கட்டணங்கள் செலுத்தி பேரூராட்சியில் தனியே பெறப்படவேண்டும். மேலும் காலியிடவரி உரிய தேதியில் செலுத்தப்படவேண்டும்.

Scanned with OKEN Scanner

3) மனைப்பிரிவு/மனைபிடம் முறைப்படுத்தியது சம்பந்தமாக நீதிமன்றத்தின் மூலம் தாவா வரப்பெற்றால் இந்த அலுவலகம் மூலம் கொடுக்கப்பட்ட அனைத்து உத்திரவுகளும் மற்றும் இரசீதுகளும் ரத்து செய்யப்படும்.

4) இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட கட்டணங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு உட்பட்டதாகும்.உள்ளாட்சி நிதித்தணிக்கையில் இழப்பு தொகை எதுவும் குறிப்பிடப்பட்டால் மனுதாரரே செலுத்த வேண்டும்.

5) விண்ணப்பதாரர் உண்மைக்கு புறம்பாக ஆவணங்களை இணைத்து முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்தியிருந்தால் இவ்வுத்திரவு பொருந்தாது.

6) இவ்வுத்திரவு குறித்து ஏதேனும் புகார் வரப்பெற்று தக்க ஆதாரங்களுடன் நிரூபணமானால் இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட தொகை ரத்தாகும்.

7) அரசு ஆணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017-ல் கண்டுள்ள நெறிமுறைக்கு உட்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் / முறைகேடுகள் இருப்பின் உத்திரவு முன் தேதியிட்டு இரத்து செய்யப்படும்.

8) தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநர் அவர்களின் கடிதம் **ந.க.எண். 24U83T0S / THOOTHUKUDI/ 2023 /TCP நாள்.05.12.2023** ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

9) நீரோடைகள்/நீர்நிலைகள், ஆக்கிரமிப்பு, உயர்மின் அழுத்த மின் பாதைகளின் கீழ் மனைகள் அமைக்கப்பட்ட மனைக்கு இவ்வுத்திரவு பொருந்தாது.

10) பொது இடம், சாலைகள் ஆக்கிரமிப்பு இருப்பின் அவ்விடத்திற்கு இவ்வுத்தரவு பொருந்தாது.

11) மேலும் ஒப்படைப்பு செய்யப்பட்ட தார்சாலைகளில் ஒப்படைப்பு செய்யப்பட்டதில் இருந்து 5 ஆண்டுகளுக்கு தங்கள் சொந்த செலவில் பராமரிப்பு செய்து கொள்ள வேண்டும்.

12) இதர அடிப்படை வசதி பணிகள் மனைப்பிரிவில் விதிமுறைகளின் படி போதுமான குடியிருப்புகள் அமையப்பெற்ற பின்னரே பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும்.

13) மேற்படி மனை பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சோலார் மினிவிளக்குகள் தங்கள் சொந்த செலவில் பராமரிப்பு செய்து கொள்ள வேண்டும்.

14) மேற்படி மனைகள் எட்டையபுரம் பேரூராட்சி 12 வது வார்டு தெற்கு ரத வீதி இராஜா நகரில் இணைந்துள்ளது.

செயல் அலுவலர்
எட்டையாபுரம் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

பெறுநர்

திரு.P.பாலமுருகன், திரு.K.நாகராஜ், திரு.R.சுப்புராஜ்,
எண். 4/101, பால்பண்ணை தெரு,
வில்லிச்சேரி, கோவில்பட்டி வட்டம்.
தூத்துக்குடி - 628 502

நகல்

1) துணை இயக்குநர் (பொ) அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, தூத்துக்குடி மாவட்டம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், எட்டையபுரம்.
3) கோப்புக்கு

Scanned with OKEN Scanner

Layout Application - Final Approval Letter

Roc No: 52/2024/A2

Date: 3/15/24 7:05 PM

From:

Executive officer

17C, Theppakulam Street, Ettayapuram.

To :

Thiru.P.Balamurugan, Thiru.K.Nagaraj, Thiru.R.Subbaraj,
No. 4/101,Paal Pannai Street,
Villiseri, Kovilpatti Taluk,
Thoothukkudi District

Online Application Number: 24U83T0S

Sir/ Madam,

Sub :

Residential Layout - Thoothukudi District – Ettayapuram Taluk– Ettayapuram Town Panchayat– Ettayapuram Village – S.F.No. 606/29B - Site Extent of 3.37 Acres or 9600.00 Sq.m – Layout Approval issued - Regarding.

Ref :

1) Deputy Director of Tuticorin District Urban Development Office's letter NO. Subject to the conditions of 24U83T0S/ THOOTHUKUDI/ 2023 /TCP dated 05.12.2023
2) Ettayapuram Town Panchayat Council pre permission date 15.03.2024
3) Related documents.

Body:

According to the letter of Deputy Director (P) of Thoothukudi District Urban Development Survey no. 606/29B Ettayapuram Town Panchayat Approval has been granted vide SWP/DTCP/THOOTHUKUDI/LAYOUT No.119/2023 for 43 plots situated at Survey no. 606/29B with an area of 9600 Sq.m (2.37 Acres).

Scanned with OKEN Scanner

Town Panchayat Council pre permission, the final approval has given.

The Ettayapuram Town Panchayat has given the Final Approval with the following conditions.

conditions:

1) This order is issued based on the documents only submitted by you. If any errors/irregularities will be find later, this order will be cancelled without intimation.

2) In case of building construction in this plot, proper building license/permission should be obtained separately from the town panchayat on payment of appropriate fees. Vacant Land tax should also be paid on due date properly.

3) All guarantees and receipts issued by this office will be cancelled if a dawa is received by the court regarding regularization of plot/tenement.

4) If any loss of amount will be mentioned in audit para. the applicant must be paid the amount as per instruction.

5) This order is not applicable if the applicant has attached false documents.

6) If any complaint is received against this guarantee and proved with sufficient evidence, this order will be cancelled.

7) Government Ordinance No.78, Department of Housing and Urban Development, dated 04.05.2017 is subject to the protocol. Any inaccuracies / irregularities in the submitted documents will void the pre-dated warranty.

8) Deputy Director of Tuticorin District Urban Development Office's letter NO. Subject to the conditions of 24U83T0S/ THOOTHUKUDI/ 2023 /TCP dated 05.12.2023. must be followed.

9) This Order does not apply to plots located under streams/water bodies, encroachment and high voltage power lines.

10) This order does not apply to public places and roads where there is an encroachment.

11) The applicant was full responsibility maintain the BT Road, Drain and Pipe Line for 5 years from the date of handing over at their own cost.

12) Other basic amenities works will be carried out by the town panchayat only after sufficient residences are constructed as per government norms in that area.

13) Street Lights and Electric Poles installed in the above plot section should be maintained at their own cost of applicant.

14) The Survey No. 606/29B – 1 to 43 plots are attached to Ward No.12 South Car Street (Raja Nagar) in Ettayapuram Town Panchayat.

Copy to

Executive officer

Signature valid

Signed by: Executive Officer
Location: Thoothukkudi
Date:2024.03.15 19:05:22

Scanned with OKEN Scanner

அனுப்புநர்	பெறுநர்
திரு.நா.சுப்பிரமணியன், செயல் அலுவலர், தேர்வு நிலை பேரூராட்சி, எட்டையபுரம்– 628 902, தூத்துக்குடி மாவட்டம்.	உதவி இயக்குநர், தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் (TNRERA) , எண்.1A, முதல் தளம், காந்தி இர்வின் பாலம் சாலை, எழும்பூர், சென்னை – 600 008

ந.க.எண். 52/2024/ அ2 நாள்.22.03.2024

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு – திருநெல்வேலி மண்டலம் – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் சர்வே எண் . 606/29B ல் 3.37 ஏக்கர் உள்ள நிலம் குடியிருப்பு மனைப்பிரிவு இறுதி அனுமதி வழங்கப்பட்டது – பொருளில் மனைப்பிரிவு சர்வே எண் . 606/29B ல் 2.37 ஏக்கர் அளவு என வாசித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1) எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் Layout Application– Final Approval Letter கடிதம் ந.க.எண்.52/2024/A2 நாள்.15.03.2024
2) மனுதாரர் P. பாலமுருகன், K.நாகராஜ் மற்றும் R.சுப்புராஜ் எனபவர்களின் விண்ணப்பம் நாள்.22.03.2024
3) தொடர்புடைய ஆவணங்கள்

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி, எட்டையபுரம் கிராமம் சர்வே எண்.606/29B ல் 3.37 ஏக்கர் உள்ள நிலம் குடியிருப்பு மனைப்பிரிவு இறுதி அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் , பார்வை (1) ல் காணும் அனுமதியின் பொருளில் மனைப்பிரிவின் அளவு 3.37 ஏக்கர் என தவறுதலாக உள்ளதை, 2.37 ஏக்கர் என திருத்தி வாசித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
எட்டையபுரம்

நகல் :
1) திரு.P. பாலமுருகன், திரு.K.நாகராஜ் மற்றும் திரு.R.சுப்புராஜ், எண்606/29B, பால் பண்ணை தெரு, வில்லிச்சேரி, கோவில்பட்டி தாலுகா.
2) கோப்புக்கு

Scanned with OKEN Scanner